## 30

# "கிருபையானது உங்கள் அனைவரோடும்கூட இருப்பதாக"

## (13:10-12, 15-25)

*எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் முடிவுப் பகுதிக்கு நாம் வந்துள்ளோம். கடைசி வசனங்களில் நாம், உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களுக்குப் பல புத்தி கூறுதல்களைக் காணுகிறோம். மேலும் நாம், எழுத்தாளரால் ஏற்படுத்தப்பட்ட ஒருசில தனிப்பட்ட வேண்டுகோள்களையும் காணுகிறோம்.*

### ஒரு பிரசங்கியாரிடம் இருந்து புத்திகூறுதல்கள் (13:10-12, 15-17)

**தேவனைத் தொழுதுகொள்ளுங்கள் மற்றும் பிறருக்குச் சேவை செய்யுங்கள் (13:10-12, 15, 16)**

10ம் வசனத்தில் தொடங்கி இந்த நிருபம் பலிசெலுத்தும் மொழிநடையைப் பயன்படுத்துகிறது. கிறிஸ்தவத்தை விமர்சித்த யூதர்களுக்குப் பதில் அளித்தல் என்பது ஒரு நோக்கமாக இருந்திருக்கலாம். அவர்கள், "கிறிஸ்தவத்தில் பலிபீடம் இல்லை" என்று கூறினால், கிறிஸ்தவர் "நமக்கு [எங்களுக்கு] ஒரு பலிபீடமுண்டு" (வசனம் 10) - அது ஆவிக்குரிய பலிபீடமாகும் (சிலுவையாகும்) என்று பதில் அளிக்க முடிந்திருக்கும். அவர்கள், "கிறிஸ்தவத்தில் நிவாரண பலி இல்லை" என்று கூறினால், பாவநிவாரண நாளில் பலிசெலுத்தப்படும் மிருகங்களின் உடல்கள் பாளையத்திற்குப் புறம்பே எடுத்துச் செல்லப் பட்டது போன்றே (எருசலேம்) நகருக்குப் புறம்பே கிறிஸ்து பலிசெலுத்தப்பட்டதை அவர் [கிறிஸ்தவர்] சுட்டிக்காண்பிக்க முடிந்தது (வசனங்கள் 11, 12; காண்க லேவியராகமம் 16:27).

ஒரு யூதர், "கிறிஸ்தவமானது பலிசெலுத்தக் கூடிய ஆசாரியத்துவத்தைக் கொண்டிருப்பதில்லை" என்று கூறியிருக்கலாம். எபிரெயருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும், இயேசு நமது பிரதான ஆசாரியராகக் குறிப்பிடப்பட்டுள்ளார், அவர் நிறைவான பலி என்ற வகையில் தம்மையே பலியாகச் செலுத்தினார். 15 மற்றும் 16 ஆகிய வசனங்கள் செயல்விளைவில், "எல்லாக் கிறிஸ்தவர்களுமே கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தக்கூடிய ஆசாரியர்களாக உள்ளனர் [காண்க 1 பேதுரு 2:9]" என்று கூறுகிறது. இவைகள் மிருகபலிகள் அல்ல. மாறாக இவைகள் *ஆவிக்குரிய* பலிகளாக உள்ளன. கிறிஸ்தவர்கள் செலுத்த வேண்டிய பலிகள் யாவை?

- *‘‘அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி” (13:15).*
- *“நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும்” என்ற பலி (வசனம் 16). (தேவன் மீதான அன்பும் பிறர் மீதான அன்பும் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டு இருப்பதைக் கவனியுங்கள் [காண்க 1 யோவான் 4:20].)*
- *கூடுதலாக மற்ற ‘‘இப்படிப்பட்ட பலிகள்’’ (வசனம் 16) - நாம் நமது வாழ்வு முழுவதையும் கர்த்தருக்கென்று அர்ப்பணித்தல் என்ற வகையிலானது (காண்க ரோமர் 12:1, 2).*

*தேவன் இனியும் மிருக பலிகளில் சந்தோஷம் அடைவதில்லை (காண்க 10:6). இருப்பினும், ஆவிக்குரிய பலிகளில் அவர் “பிரியமாயிருக்கிறார்” (13:16).*

### *நடத்துனர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களுக்கு உங்களைக் கீழ்ப்படுத்துங்கள் (13:17)*

*எபிரெயக் கிறிஸ்தவர்களின் கடந்தகால நடத்துனர்கள் 13:7ம் வசனத்தில் குறிப்பிடப் பட்டிருந்தனர். இப்போது நாம், நிகழ்கால நடத்துனர்கள் மீது கவனம் குவித்தலைக் காணுகிறோம். 17ம் வசனத்தில் உள்ள “நடத்துகிறவர்கள்” என்ற சொற்றொடர், சபைக்குழுமத்தில் உள்ள மூப்பர்களை முதன்மையாகக் குறிக்கிறது. நம்மை நடத்துகிறவர்கள் வசனரீதியற்ற எதையும் முன்மொழிந்தால் அவ்விஷயத்தில் நாம் அவர்களுக்குக் கீழ்ப்படியக்கூடாது என்பது உண்மையே (நடபடிகள் 5:29). இருப்பினும் நாம், முடிவுசெய்தல் மற்றும் கருத்து ஆகிய விஷயங்கள் குறித்து, கீழ்ப்படிதல் உள்ள ஆவியைக் கொண்டிருக்க வேண்டும்.[1] வாசகர்களின் ஆவிக்குரிய பிரச்சனையின் பகுதி என்ற வகையில், அவர்கள் தங்கள் நடத்துனர்களின் வழிகாட்டுதலைப் புறக்கணிக்கும்படி சபைக்குழுமத்தில் இருந்து விலகி இருந்தனர் என்று 17ம் வசனம் சுட்டிக்காண்பிக்கலாம்.*

*மூப்பர்களுக்குக் கீழ்ப்படிந்து இருத்தல் ஏன் அவ்வளவு முக்கியமானதாக உள்ளது? இதற்கான பதில், 17ம் வசனத்தின் மையப் பகுதியில் காணப்படுகிறது: “அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி ... அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.” மூப்பராக இருப்பதைக் காட்டிலும் பெரிய பொறுப்பு வேறு எதுவும் இருப்பதில்லை!*

## *ஒரு நண்பரிடம் இருந்து வேண்டுகோள்கள் (13:18, 19, 22, 24)*

*18 முதல் 25 வரையுள்ள வசனங்கள் இந்தப் புத்தகத்தை முடித்து வைக்கின்றன. இந்தப் பகுதியில் பல வேண்டுகோள்கள் உள்ளடங்கியிருக்கின்றன. இவைகள் ஒரு நண்பரிடத்தில் இருந்து வந்த வேண்டுகோள்கள் என்பதைக் காட்டிலும், ஒரு பிரசங்கியார் அல்லது போதகரிடத்தில் இருந்து வந்த புத்திமதிகள் என்றவகையில் அதிகமாக இருப்பதில்லை.*

### *“எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்” (13:18, 19)*

*பவுல் தமக்காக ஜெபிக்கும்படி தமது நண்பர்களிடத்தில் அடிக்கடி கேட்டுக்கொண்டார் (ரோமர் 15:30; கொலோசெயர் 4:3;*

*2 தெசலோனிக்கேயர் 3:1); இந்த எழுத்தாளரும் அதையே செய்தார் (எபிரெயர் 13:18). அவர்கள் இதை இன்னும் அதிக ஊக்கத்துடன் செய்யும்படி அவர்களை அவர் ஊக்கப்படுத்தினார் (வசனம் 19). இந்த நிருபத்தை எழுதியதில் அவர் தமது வாசகர்களின் மிகச்சிறந்த ஆர்வத்தைத் தமது இருதயத்தில் கொண்டிருந்தார்; ஆகையால் அவரது மனச்சாட்சி தெளிவாக இருந்தது. (அவர்களைக் கடைசியில் அவர் மீளக்கட்டுவித்தபோது அவர் கூறுவதற்கு இன்னும் அதிகமானவற்றைக் கொண்டிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை [வசனம் 19].)*

***"எனது வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்" (13:22)***

*எழுத்தாளர், தாம் எழுதியிருந்தவற்றை ஏற்றுக்கொள்வதில் எபிரெயக் கிறிஸ்தவர்கள் சிரமம் கொண்டிருப்பார்கள் என்று புரிந்துகொண்டிருந்த நிலையில், தமது செய்தியை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி ("சகித்துக்கொள்ளும்படி") மற்றும் அதைக் குறித்து திறந்த மனங்களைக் கொண்டிருக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் மிகவும் அதிகமாக எழுதியிருந்தார் என்று சிலர் நினைத்திருக்கலாம். இருப்பினும், இந்த நிருபத்தில் கலந்துரையாடப்பட்ட அதிக பரப்பெல்லை கொண்ட வலிவார்ந்த தலைப்புக்களைக் கருதுகையில், அவர்களுக்கான அவரது சிகிட்சை சுருக்கமாக இருந்தது என்றே அவர் கருதினார்.*

***"யாவரையும் வாழ்த்துங்கள்" (13:24)***

*24ம் வசனத்தின் முதல் வாக்கியம், சபைக்குழுவினரின் ஒரு பகுதிக்கு மாத்திரம் உரைக்கப் பட்டதாகக் காணப்படுகிறது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, சில யூதக்கிறிஸ்தவர்கள் சபைக்குழுமத்தில் இருந்து வெளியேறி இருந்தனர், ஆராதனைக்கு சபைகூடுகைகளில் அவர்கள் பங்கேற்காமல் இருந்தனர் (10:24, 25) மற்றும் தங்களை நடத்துபவர்களின் வார்த்தைகளைக் கவனிக்க அவர்கள் மறுத்திருந்தனர் (13:17). இவர்கள் முற்றிலுமாக விழுந்து போகுதலின் விளிம்பில் இருந்தனர் (காண்க எபிரெயர் 6:1-8; 10:23-31). இவர்கள் மற்ற கிறிஸ்தவர்களுடனான தங்கள் ஐக்கியத்தை மீளக் கட்டுவிக்க வேண்டியவர்களாக இருந்தனர் (இது அவர்களுடன் மீண்டும் அவர்களை இணைத்துக் கொள்வதால் தொடங்கப்படும்). சபையில் நாம் உண்மையாக நிலைத்திருப்பதற்கு ஒருவருக்கொருவர் தேவைப்படுகிறோம் (காண்க 10:24)!*

## *முடிவுரை (13:20, 21, 23, 25)*

*இந்த நிருபத்தின் முடிவுக்கு அண்மையில் ஒரு தனிப்பட்ட குறிப்பு உட்செருகப் பட்டிருந்தது (வசனம் 23), ஆனால் கடைசி வரிகள் ஒரு ஆசீர்வாதத்தின் மேலாதிக்கத்தைக் கொண்டுள்ளன (வசனங்கள் 20, 21) மற்றும் இது ஒரு சுருக்கமான ஆசீர்வாதமாக இருந்தது (வசனம் 25). ஆசீர்வாதம் என்பது புதிய ஏற்பாட்டில் மிகவும் வனப்பு நிறைந்த ஒன்றாக உள்ளது. இயேசுவின் மீதான வலியுறுத்தத்தைக் கவனியுங்கள். எபிரெயக் கிறிஸ்தவர்கள் இயேசுவினிடத்தில் திரும்பி வந்து "எல்லா விலையும் கொடுத்து அவரைப் பற்றிக்கொள்ளுதல்" என்பது அவசியமாக இருந்தது.[2] நாம் இயேசுவினிடத்தில் உண்மையானவர்கள் என்ற வகையில் நிலைத்திருந்தால்,*

*தேவன் நம்மை "சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவார்" - நாம் விரும்புகிற "சகலவித நற்கிரியையிலும்" அல்ல, ஆனால் "தம்முடைய சித்தத்தின்படிசெய்ய" தேவையான "சகலவிதமான நற்கிரியையிலும்" அவர் நம்மைச் சீர்பொருந்தினவர்கள் ஆக்குவார் (வசனம் 21).*

இந்த நிருபம், வாசகர்கள் யாவரிடத்திலும் தேவனுடைய கிருபை இருக்க வேண்டும் என்ற ஜெபத்துடன் முடிகிறது. இந்த மாபெரும் புத்தகத்தைப் பற்றிய நமது படிப்பை நாம் முடிக்கும் இவ்வேளையில், *இன்றைக்கான சத்தியம் புத்தகங்களின்* வாசகர்கள் எல்லாருடனும் தேவனுடைய கிருபை இருக்கும்படி நான் ஜெபிக்கிறேன்: "கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக" (வசனம் 25)!

## போதகருக்குக் குறிப்புகள்

நடத்துவத்துவம் பற்றிய ஒரு புத்தகத்தில் நான், ஒரு நல்ல பின்பற்றாளராக இருத்தல் பற்றிய ஒரு குறுகிய பாடத்தை உள்ளடக்கினேன்.[3] அந்தப்படிப்பு, மூப்பர்களிடத்தில் உறுப்பினர்கள் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புக்களைக் கலந்துரையாடுவதில் எபிரெயர் 13ல் இருந்து வசனங்களைப் பயன்படுத்தியது:

1. மதிக்கும் ஆவியுடன் அவர்களை நினைவுகூருங்கள் (வசனம் 7).
2. கீழ்ப்படிதல் உள்ள ஆவியுடன் அவர்களை மதியுங்கள் (வசனம் 17).
3. அன்புகூரும் ஆவியுடன் அவர்களைத் தொடர்புகொள்ளுங்கள் (காண்க வசனம் 24அ).

இந்தப் பாடம், இந்த மூன்று திறவுகோல் வசனங்கள் குறித்த கூடுதல் குறிப்புகளைக் கொண்டுள்ளது. இவைகள் எபிரெயர் 13ஐ நீங்கள் போதிக்கையில் உங்களுக்கு உதவிகரமாக இருக்கலாம்.

---

குறிப்புகள்

[1]எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், சபைக்குழுமத்தின் நடத்துனர்களைப் பின்பற்றாது இருந்தவர்களைக் குறித்தே முற்றிலும் கவலையாக இருந்தார். வேறொரு இடத்தில் மூப்பர்கள் தங்கள் பொறுப்பில் உள்ளவர்களை "இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக" இருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்பட்டது (காண்க 1 பேதுரு 5:3). ஞானமுள்ள மூப்பர்கள் எப்போதுமே, கருத்து விஷயங்கள் குறித்து உறுப்பினர்களின் முன்னுரிமைகளுக்குக் கூருணர்வு கொண்டிருப்பார்கள். உறுப்பினர்கள் தங்களின் முன்னுரிமைகளை வெளிக்காண்பிக்கும்படிக்கு அவர்களை நடத்துனர்கள் ஊக்குவிக்கவும் செய்ய வேண்டும். [2]Neil. R. Lightfoot, ACU extension class on Hebrews taught in Fort Worth, Texas, 26 October 1985. [3]David Roper, "Three 'R's of 'Follow-ship,' " in "Developing Leadership," *Truth for Today* (July 2007): 36-37.